<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 185/2020

இன்று 2025 ம் ஆண்டு ஜுன் திங்கள் 19ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனபால் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ராஜமாணிக்கம் | கிராமம் | : | பொங்குபாளையம் |
| வயது | : | 50 | தாலூக்கா | : | திருப்பூர் |
| நாள் | : | 19-06-2025 | மாவட்டம் | : | திருப்பூர் |

**<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. தாவா எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன். தாவாச் சொத்தில் கட்டிடம் உள்ளதா என்றால் உள்ளது. என்ன கட்டிடம் என்றால் தார்சு கட்டிடம். 2020ல் அந்த கட்டிடத்தின் மதிப்பு என்ன இருக்கும் என்றால் ஞாபகமில்லை. நான் தாவாவில் சொத்து மதிப்பு என்ன போட்டுள்ளேன் என்று தெரியுமா என்றால் ஞாபகமில்லை. தாவாச் சொத்து எந்த பகுதியில் உள்ளது என்றால் காளாம்பாளையம் பகுதியில் உள்ளது.

2. அந்த பகுதியில் ஒரு செண்ட் மதிப்பு ரூ. 1 லட்சம் இருக்கும் என்றால் தெரியாது. தாவாச் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என தெரியுமா என்றால் தெரியும். செக்குபந்திகள் தெரியுமா என்றால் தெரியாது. தாவா தாக்கல் செய்தபோது யாரார் சென்றோம் என்றால் நானும் என்அண்ணன் பாலசுப்பிரமணியனும் சென்றோம். பாலசுப்பிரமணியன் தான் தாவாவில் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். பாலசுப்பிரமணியன் இந்த தாவாவில் என்னை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

3. தாவா பிராதின் 6வது பத்தியில் 4ம் பிரதிவாதி என்னை காலி செய்யச் சொன்னதாக சொல்லி உள்ள தேதி தெரியுமா என்றால் ஞாபகமில்லை. என்னை காலி செய்யச் சொல்லி தொந்தரவு செய்தபோது, 4ம் பிரதிவாதி சொத்தை அம்மா அவர் பெயருக்கு எழுதி வைத்துள்ளதாகவும், அதன் பேரில் என்னை காலி செய்யச் சொன்னார். நான் எழுதி வைத்ததாக சொல்வது என் தாயார் 4ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த உயில் பற்றியது தானா என்றால் இல்லை.

4. என் அம்மா 4ம் பிரதிவாதிக்கு என்ன எழுதி வைத்தார் என்று கேட்டபோது சொல்ல முடியாது சொத்து என் பெயருக்கு உள்ளது என்று கூறினார். இந்த விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும், நீதிமன்றத்தில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. காவல் துறையில் நான் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அனைவரும் சென்றோமா என்றால் சென்றோம். கௌசல்யாதேவியை காவல் நிலையத்தில் விசாரித்தார்களா என்றால் ஆமாம்.

5. காவல் நிலையத்தில் கௌசல்யாதேவியை விசாரணை செய்தபோது, சொத்து என் பெயருக்கு உள்ளது அதனால் தனபால் காலி செய்யவேண்டும் என்று சொன்னார் என்றால் சரியல்ல. காவல்துறையினரும் கௌசல்யாதேவியை என்ன எழுதி வைக்கப்பட்டுள்ளது என்று விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. உயில் பற்றிய விவரத்தை என் அம்மா, 4ம் பிரதிவாதி காவல் நிலையத்தில் சொல்லி உள்ளார்கள். நீதிமன்றத்தில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. 4ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. காவல்துறையில் புகார் கொடுத்தற்கு ரசீது எதுவும் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு தமிழ் எழுதப் படிக்க தெரியுமா என்றால் தெரியும். என் மனைவி நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். நீதிமன்றத்தில் அவர் நின்று கொண்டிருக்கிறார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் யாரால் தட்ட்சு செய்யப்பட்டது என்றால் தெரியாது. எந்த

தேதியில் காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. காவல் துறையினர் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

7. என் தாயாருக்கு 3ம் நாள் காரியங்கள் நடந்தது என்றால் சரிதான். அந்த காரியத்திற்கு என் அண்ணன் மற்றும் அனைவரும் சேர்ந்து தான் செய்தார்கள் என்றால் சரிதான். உறவினர்கள் அனைவரும் வந்தனர் என்றால் சரிதான். காரியம் முடிந்த 2, 3 நாட்களுக்குள் என் சகோதரியோடு தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. அவர் தான் தகராறு செய்தார். அது பற்றி காவல் துறையில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன்.

8. தகராறு நடந்ததால் என் சகோதரி என்னை காலி செய்யக் கூறினாரா என்றால் ஆமாம். 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தங்கள் எதிர்வாதத்தில் என் அம்மா 4ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்ததாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தங்கள் எதிர்வாதத்தில் என் அம்மா 4ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்ததாக குறிப்பிட்டு சொல்லி உள்ளார்கள் என்றால் தெரியாது.

9. எதிர்வாத விவரங்கள் தெரிந்துக் கொண்டே வேண்டுமென்றே தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு உயில் சாசனம் பற்றி நன்கு தெரியும் நான் வேண்டுமென்றே தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயாரின் காரியம் முடிந்த பிறகு அந்த உயிலை அனைவரிடமும் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. உயில் பற்றிய விவரங்களை தெரிந்து கொண்டு தான் தாவா பிராதின் 6 மற்றும் 7ம் பத்திகளில் உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை என்று சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

10. தாவா பிராதில் தாவா பிராது பற்றிய சங்கதிகள் எனக்கு படித்துக் காட்டப்பட்டு நான் கையெழுத்து செய்தேன் என்ற வாசகம் இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பி.காம் படித்துள்ளார். நான் 8ம் வகுப்பு படித்துள்ளேன். 1ம் பிரதிவாதி சொல்லி தான் தாவா விவரங்கள் தயாரிக்கப்பட்டது என்றால் முதன்முறையாக என் அண்ணனை அழைத்து சென்றேன். என் அண்ணன் தாவா தாக்கல் செய்யச் சொன்னார். வழக்கறிஞர் கேட்டு தாவா தாக்கல் செய்யச் சொன்னார். அதன் பின்னிட்டு அவர் வரவில்லை.

11. முதன்முறையாக என் அண்ணனை அழைத்து சென்றபோதே அனைத்து விவரங்களையும் வழக்கறிஞரிடம் சொல்லி விட்டோம் என்றால் சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி அவர் கணவரை விட்டு பிரிந்து வந்தது எப்போது என்றால் அவர் கருவுற்ற போதே வந்துவிட்டார். 4ம் பிரதிவாதியின் மகனுக்கு தற்போது வயது 25 ஆகும். 4ம் பிரதிவாதி சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பே வந்துவிட்டார் என்றால் சரிதான்.

12. 4ம் பிரதிவாதி வேலைக்கு சென்று தன் தேவைகளை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. என் தாயாரும், 4ம் பிரதிவாதியும் ஒன்றாக இருந்தார்கள் என்றால் இல்லை. 4ம் பிரதிவாதி வேலைக்கு சென்றார் என் தாயாரும் 4ம் பிரதிவாதியும் தான் வீடு கட்ட கடன் பெற்றனர் என்றால் என் தாயார் தான் கடன் வாங்கினார். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் என் தாயாரும் 4ம் பிரதிவாதியும் கடன் பெற்றதாக கையொப்பம் செய்துள்ளனர். நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

13. என் தாயார் இறக்கும் வரை நல்ல உடல் நலத்துடன் இருந்தார் என்றால் இல்லை உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தார். என் தாயாருக்கு சிகிச்சை பெற்றதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. 1ம்

பிரதிவாதி தான் என் தாயாரின் காரியங்கள் முடிந்த பிறகு உயில் ஆவணம், அசல் கிரய ஆவணம் ஆகியவற்றை 4ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. எங்கள் உறவினர்களை வைத்து சமரசம் எதுவும் பேசினோமா என்றால் இல்லை.

14. உயில் சாசனப்படி 4ம் பிரதிவாதிக்கு சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரியல்ல. உயில் சாசனத்தின் நகலை பெற்றுக் கொண்டு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உயில் சாசனப்படி 4ம் பிரதிவாதிக்கு தான் சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்ய எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி என்னையோ, என் குடும்பத்தினரையோ ஒருபோதும் தவறாக பேசியது கிடையாது. தாவாவிற்காக ஆவணங்கள் உருவாக்கி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

15. என் தாயார் நல்ல உடல் நலத்துடனும் நல்ல மனநிலையிலும் இருந்தபோது 21.06.2017ம் தேதி எழுதி வைத்த உயில் படி 4ம் பிரதிவாதி சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியை தொந்தரவு செய்யவேண்டி தவறான விவரங்களுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/- A.Vanitha
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.